-11-
-13-

362/03

T.I./15987/03

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

நிலம் – ஒப்படை – குளம், குட்டை, ஓடை, வாய்க்கால் மற்றும் ஆற்று புறம்போக்கு முதலிய நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் சம்பந்தமாக – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

வருவாய் (நிமு.1(2) துறை

அரசாணை (நிலை) எண்:186 நாள்: 29.4.2003

படிக்கவும்:

அரசாணை (நிலை) எண்.41, வருவாய் (எல்) துறை, நாள் 20.1.87.

ஆணை:

அரசு நிலங்கள் குறைவாக உள்ளன. தகுதி வாய்ந்த ஏழைகளுக்கு அரசு புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்தல் மூலமும், இதர வளர்ச்சி திட்டங்களுக்காகவும் மற்றும் பொது நோக்கங்களுக்காகவும் அளிப்பதன் மூலம் அரசு நிலம் நன்கு பயன்பட வேண்டும் என்பதால் அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு தடுக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும்.

2. நீரோட்டங்கள் மற்றும் குளம், குட்டைகள் விலங்குகளுக்கு மட்டுமின்றி பொதுமக்களுக்கும் பயன்படுகின்றன. சில இடங்களில் அவை குடிநீருக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. தொடர்ந்து குடிநீர் வழங்கும் வகையில் ஆறு மற்றும் குளம் ஓடைகளின் உட்பரப்பில் கிணறுகள் வெட்டும் பழக்கம் பரவலாக இருந்து வருகிறது. மேலும் நீரோட்டங்கள், குளங்கள் மற்றும் குட்டைகள், அவற்றின் அருகாமையில் உள்ள கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்த நிலையில் இருக்க உதவுகிறது. எனவே நீரோட்டங்களையும் குளங்களையும் மற்றும் குட்டைகளையும் பாதுகாத்து பராமரிக்க வேண்டியது மிகவும் அவசியம். இந்த மாதிரி உள்ள எல்லா நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்றுவதில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு கூர்ந்து கவனிக்க வேண்டியதன் முக்கியத்துவம் கருதியும் நீர் நிலை புறம்போக்கு மற்றும் நீர்வழி புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை துவக்க தாட்சண்யம் பாராமல் அகற்றப்பட வேண்டும். இது பல்வேறு வருவாய்த்துறை அலுவலர்களின் காலமுறை புலத்தணிக்கையின் மூலமாகவே உறுதி செய்யப்பட முடியும். ஆட்சேபணையற்ற ஆக்கிரமிப்புகளை மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் நேரடி புலத்தணிக்கை செய்த பின்பு வரன்முறைப்படுத்த அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பலாம் என்கிற சலுகையை அளவுக்கு மீறி பயன்படுத்துவதற்கு வழிவகுக்கும் எனக் கருதி அனைத்து நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் வரன்முறைப்படுத்தும் செயற்குறிப்புகளுக்கு அரசு முழுமையான தடையை விதித்து அரசாணை நிலை எண்.41, வருவாய்த்துறை, நாள் 20.1.87ல் ஆணை பிறப்பித்துள்ளது.

3. அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை ஒரு குறிப்பிட்ட கால வரையரைக்குள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்ட ஆட்சியரை தலைவராகவும் கீழ்க்கண்ட அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு மாவட்ட அளவில் குழு ஒன்று அரசாணை (நிலை) எண்.105, வருவாய்த்துறை, நாள் 7.3.2001-ல் அமைக்கப்பட்டுள்ளது:

1) மாவட்ட ஆட்சியர் – தலைவர்
2)காவல்துறை-மாவட்ட அளவிலான அலுவலர் – உறுப்பினர்
3)பொதுப்பணித்துறை-மாவட்ட அளவிலான சம்பந்தப்பட்ட செயற் பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு) – உறுப்பினர்
4)நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் – உறுப்பினர்
5)வனத்துறை/மாவட்ட வன அலுவலர் – உறுப்பினர்

மாவட்ட அளவிலான இக்குழு, மாதம் ஒரு முறை கூடி ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்த செயல் திட்டத்தை வகுக்கும், இக்குழுவின் செயல்பாடுகளை மாநில அளவில், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆய்வு செய்து வருகிறார்.

4. நீர்நிலை புறம்போக்குகள், நீர்ப்பிடிப்பு, நீர்வழி புறம்போக்குகள், மேய்க்கால் நிலங்கள், கோவில் நிலங்கள், களம் போன்றவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபகரமானவை என்பதால் அவற்றில் உள்ள எல்லா ஆக்கிரமிப்புகளும் உரிய முன்னறிவிப்பு கொடுத்துவிட்டு அகற்றுவதற்கு வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் நில ஆக்கிரமிப்புச் சட்டம் 1905-ன்படி அதிகாரம் பெற்றுள்ளனர். இருப்பினும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் ஏற்படும் பிரச்சினைகளினால் மேற்படி அலுவலர்கள் தக்க கவனம் செலுத்தி செயல்படாத காரணத்தால் நீர்வழிகளில் ஆக்கிரமிப்பு ஏற்பட்டு மழைநீர் குளம், குட்டை, ஏரி ஆகிய நீர்நிலைகளுக்கு சென்று சேருவது தடைபட்டுவிடுவதால் ஏரிகளும் குளங்களும் பாதிக்கப்படுகின்றன. இத்தகைய ஆக்கிரமிப்பு காரணமாக குடியிருப்பு பகுதிகளில் சேரும் மழை நீர் அருகாமையில் உள்ள ஏரி குளங்களுக்கு சென்று சேருவது தடைபட்டு வெள்ளம் பாதிக்கும் நிலை ஏற்படுத்தப்படுகிறது. நீர்நிலை புறம்போக்குகளில் ஆக்கிரமிப்புகள் எழும்போது தடுப்பதற்கும், ஏற்பட்ட உடனேயே அவற்றை அகற்றுவதற்கும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் போதிய நடவடிக்கையை உரிய நேரத்தில் எடுக்க தவறியதால் நீர்நிலை புறம்போக்குகளில் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டு பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகிறது.

5.. எனவே ஓடை, வாய்க்கால், குளம், குட்டை மற்றும் ஆற்று புறம்போக்கு முதலிய அனைத்து நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது சம்பந்தமாக 20.1.97 நாளிட்ட வருவாய்த்துறை, அரசாணை (நிலை) எண்.41-ஐ அரசு மறு பரிசீலனை செய்தது. இனிவரும் காலங்களில் அனைத்து நீர்நிலை புறம்போக்கு நிலங்களிலும் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டு பாதிக்கப்படாமல் பாதுகாப்பதற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் வருவாய்த்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்களால் எடுக்கப்பட வேண்டும் என்று அரசு இவ்வாணையிடுகிறது:-

39 15

57

ப்பிட்ட கால
ஆட்சியரை
ன்று மாவட்ட
ள் 7.3.2001-ல்

ளை அகற்றுவது
மாநில அளவில்,
றார்.

புறம்போக்குகள்,
ஆக்கிரமிப்புகள்
க்கிரமிப்புகளும்
வருவாய்த்துறை,
ட்சி அலுவலர்கள்
ார். இருப்பினும்
படி அலுவலர்கள்
கிரமிப்பு ஏற்பட்டு
சன்று சேருவது
தனை. இத்தகைய
ர் அருகாமையில்
பாதிக்கும் நிலை
புகள் எழும்போது
ும் சம்பந்தப்பட்ட
வறியதால் தீர்வை
ளாகி வருகிறது.

ஆற்று புறம்போக்கு
ஆக்கிரமிப்புகளை
ரசாணை (நிலை)
ங்களில் அனைத்து
ல் பாதிக்கப்படாமல்
யத்துறை மற்றும்
ன்று அரசு ஆணை

i) குளம், குட்டை, ஓடை புறம்போக்கு, வாய்க்கால் புறம்போக்கு, ஆற்று புறம்போக்கு, நீர்நிலை புறம்போக்குகள் மற்றும் நீர்வழி புறம்போக்குகள், நீர்ப்பிடிப்பு பகுதிகள் ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபணைக்குரியவை என கருதப்படுவதால் அவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து மாவட்டஆட்சியர்களும்கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ii) நீர்வழி நீர்நிலை புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தும் செயற்குறிப்புகளுக்கு முழுமையான தடை விதித்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.41, வருவாய் (எம்) துறை, நாள் 20.1.87-ல் உள்ள தடையாணைகளை அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/மாவட்ட வருவாய் அலுவலர்கள் முழுவதும் வலிந்து செயல்படுத்துமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ii) அரசாணை (நிலை) எண்.855, வருவாய்த்துறை, நாள் 31.8.96-ல் ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களின் உண்மை நிலையை ஆராய்ந்து ஒப்படை செய்வது குறித்து பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட குழுவின் செயல்பாட்டினை ஆய்வு செய்து அறிக்கை அனுப்பும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

iv) ஆக்கிரமிப்புகள் அகற்றுவது சம்பந்தமாக 7.3.2001 நாளிட்ட வருவாய்த்துறை அரசாணை (நிலை) எண்.105-ல் அமைக்கப்பட்ட மாவட்ட அளவிலான குழுவின் செயல்பாட்டினை ஆய்வு செய்து அனைத்து மாவட்டங்களிலும் நீர்நிலை, நீர்வழி புறம்போக்குகளில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் அகற்றும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அறிக்கை அனுப்பும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

v) வருங்காலங்களில் அனைத்து நீர்நிலைகளிலும் நீர்வழி புறம்போக்குகளில் எழும் ஆக்கிரமிப்புகளை உடனுக்குடன் அகற்றுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அனைத்து பொதுப்பணித்துறை அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. மேலே பத்தி 5-ல் உள்ள அரசாணைகளை மீறி உரிய நோக்கில் நடவடிக்கை எடுக்க தவறும் அனைத்து அலுவலர்கள் மீதும் தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி சிறப்பு அணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மற்றும் தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை (நீர் வள ஆதார அமைப்பு) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

...4/-

-14-

7. மேலே பத்தி 5இல் உள்ள அரசாணைகளுக்கிணங்க வருவாய்த்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்குப்படி சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மற்றும் பொதுப்பணித்துறை, தலைமைப் பொறியாளர் (நீர் வள ஆதார அமைப்பு) சென்னை-5 கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்படி அரசாணையின்படி மேல்நடவடிக்கை எடுத்து மூன்று மாத காலத்திற்குள் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை ஆகியோர்களது அறிக்கையினை பெற்று ஆய்வு செய்து அரசுக்கு உண்மை நிலை அறிக்கை ஒன்றினை அனுப்புமாறு சிறப்பு ஆணையர் (ம) நில நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணையினை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை அளிக்கும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், பொதுப்பணித்துறை, தலைமைப் பொறியாளர் (நீர் வள ஆதார அமைப்பு) சென்னை-5 ஆகியோர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

/ஆளுநரின் ஆணைப்படி/

நகுல்தேவன்
அரசு செயலர்

பெறுநர்

சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை-5.

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்

தலைமைப் பொறியாளர், (நீர்வள ஆதார அமைப்பு) சென்னை மண்டலம், சேப்பாக்கம், சென்னை-5.

தலைமைப் பொறியாளர், (நீர்வள ஆதார அமைப்பு),பொள்ளாச்சி மண்டலம்,(இருப்பு) கோயம்புத்தூர்.

தலைமைப் பொறியாளர், (நீர்வள ஆதார அமைப்பு) (பொறுப்பு), மதுரை மண்டலம்,தல்லாகுளம், மதுரை 625 002.

தலைமைப் பொறியாளர், (நீர்வள ஆதார அமைப்பு),திருச்சிராப்பள்ளி மண்டலம், எண்.2,அரபிக் காலேஜ் ரோடு, காஜா நகர், மன்னார்புரம்,திருச்சிராப்பள்ளி 620 020,

நகல்:

செயலாளர்,பொதுப்பணித்துறை,சென்னை-9
அனைத்துமாவட்டவருவாய்அலுவலர்கள்
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9
மாண்புமிகு அமைச்சர் (பொதுப்பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் உதவியாளர், சென்னை-9

துணை
வருவாய்
அனைத்து,
இ.கோ./உதி

Verified by PeopleStrength

-15-

-5-

துணைச் செயலர் (நிழு) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9
வருவாய்(நிழு.II,III,IV,V,VI)த்துறை,சென்னை-9

அனைத்துத் தலைமைச் செயலகத்துறைகள்

இ.கோ./உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

Verified by RealEstate TM